# “நடராசர் சிலை - ஓர் அரிய விளக்கம்”



## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அருளிய

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

மார்கழி மாத வெளியீடு (Jan 2016)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,116

காணிக்கை ரூ.10/-

# உள்ளுறை

1. ஐந்தொழில் வல்லான் நிலை [நடராசர் சிலை பற்றிய ஓர் அரிய விளக்கம்].
2. மதுரை மாமூதூர் மீனாட்சியம்மன் ஆலயம்.
3. குடமுழுக்கு விழாவில் குருட்டுத் தன்மை!
4. காதணி விழா கொண்டாடும் முறை - குழந்தைகளுக்கு காது குத்தும் மரபு எப்படி வந்தது? பொருள் என்ன?
5. உண்மையிலே இந்துமதத்தில் வீழ்ச்சி நிலையா?



நடராசர் சிலை

# ஐந்தொழில் வல்லான் நிலை

## [நடராசர் சிலை - ஓர் அரிய விளக்கம்]

**ஆசிரியர்: அருட்கொடை வள்ளல், குருதேவர், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரூர்.**

♦ ஆடல் வல்லான், நடராசர், கூத்தர்ப் பெருமான், ஆடும் பெருமான், தாண்டவ மூர்த்தி, மன்றுடியார் என்று பல பெயர்கள் நடராசர் சிலைக்கு குருபாரம்பரியத்தில் உள்ளன.

♦ பதினெண்சித்தர்களின் உருவ வழிபாட்டுக் கொள்கையின் மிகப்பெரிய செயல் விளக்கச் சிலையே நடராசர் சிலை.

♦ பதினெண்சித்தர்கள் படைத்த கலையழகும், தத்துவ ஆழமும் நிறைந்த அரிய படைப்பாகும் இந்த நடராசர் சிலை.

♦ இம்மண்ணுலகில் தோன்றியுள்ள மதங்கள் அனைத்தும் வியந்து, விதந்து, போற்றிப் பாராட்டி, ஏற்றுக் கொள்ளும் ஓர் ஒப்புயர்வற்ற கடவுள் நிலை விளக்கச் சிலையே இது.

♦ இச்சிலை இடம் பெறாத கலைக்கருவூலமோ, கண்காட்சியகமோ இப்புவிப்பரப்பில் எங்குமில்லை என்ற ஓர் உண்மையே போதும்; பதினெண்சித்தர்கள் மிகச் சிறந்த சிற்பிகள் என்பதை விளக்கிட.

இந்தச் சிலைதான் பதினெண்சித்தர்களின் அமுதத் தமிழ்மொழியே அண்டபேரண்டங்கள் அனைத்தையும் ஆளுகின்ற அருளாட்சி மொழி என்ற பேருண்மையை விளக்குகின்றது. அதாவது **“தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!”** என்ற வாக்குக்குரிய ஈசனாக => <u>வாக்கீசனாக</u> அல்லது <u>வாகீசனாக</u> விளங்குபவர் இந்த கூத்தர்ப் பெருமானாகிய நடராசரே.

பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் இமயமலையின் கைபர் போலன் கணவாய்கள் வழியாகக் குடுமியும் கோவணமும், கோலும் குடுவையுமாக ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு வந்ததற்குப் பல நூறுயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே; **மெய்யான இந்துமத**த்தின் முழுமுதற் தலைவனாக, பரம்பொருளாக, ஈசனாக, மகேசுவரனாக, ஆதிஈசுவரனாக, அனாதிஈசுவரனாக, பதினெண்சித்தர் பீடத்தின் முதல் பீடாதிபதியாக, இம்மண்ணுலகின் முதல் நிலமான கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டம் [the Lost Lemuria] எனும் குமரிக் கண்டத்துப் பஃறுளியாற்றங் கரையில் உருவான முதல் அரசான பாண்டியப் பேரரசின் முதல் அரசனாக ... விளங்கிய சித்தர் சிவபெருமானின் வடிவத்தின் கலையழகு மிக்க சிலையாக உருவானதுதான் இந்த நடராசர் சிலை.

இந்தச் சிலை ஆயிரத்தெட்டு வடிவ வேறுபாடுகளைக் கொண்டு வடிக்கப்பட்டு; அமைக்கப்பட்ட ஆலயங்களே ஆயிரத்தெட்டுச் சிவாலயங்கள். அண்மையில் தருமபுர ஆதீனத்தின் மூலமாகப் பெரும்புலவர், மகாவித்துவான், சைவ சித்தாந்தக் கலாநிதி, திருமந்திர மேதை, திருக்குறளுக்கு உரைவளம் கண்ட பேரறிஞர் தண்டபாணி தேசிகர் தயாரித்து வெளியிட்ட **'ஆடல் வல்லான்'** என்ற புத்தகத்தில் இந்த நடராசர் சிலையின் எண்ணற்ற வடிவ வகைகள் புகைப்படமாக வெளியிடப் பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

ஏழை பணக்காரனற்ற, முதலாளி தொழிலாளி என்ற வேறுபாடற்ற சகோதரத் தத்துவ சமத்துவத்தினை உருவாக்கக் கூடிய ஒரு மாபெரும் அரசியல் தத்துவத்தைக் கண்டறிந்த ஒரு மாமேதை **காரல் மார்க்சி**ன் கருத்தைக் கவர்ந்த பெருமை இந்தச் சிலைக்கு உண்டு. இதேபோல் இம் மண்ணுலகின் மிகப்பெரிய நாத்திகரான **இங்கர்சாலி**ன் கருத்தையும் கவர்ந்த பெருமை இந்தச் சிலைக்கு உண்டு. இம் மண்ணுலகின் விஞ்ஞானத் துறையையே அடியோடு மாற்றியமைத்த விஞ்ஞான ஆராய்ச்சி மாமேதை **டாக்டர் ஐன்சுடீனி**ன்

கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தாக அவரின் எதிரில் எப்போதும் இருந்த பெருமையுடையது இந்தச் சிலை.

இந்தச் சிலை தமிழினத்தின் இமாலயச் சாதனை. ஒவ்வொரு தமிழனும் பூரிப்போடும், பெருமையோடும், உரிமையோடும் பாதுகாத்திட வேண்டிய கலைச் சிறப்பும், கடவுட்டன்மையும் உடைய வடிவமைப்பே இந்த நடராாசர் சிலை. தமிழினத்தைப் பற்றும், பாசமும், கட்டுப்பாடும், கட்டுக்கோப்பும், பல புதிய கட்டமைப்புக்களையும் பெற்று ஒற்றுமையும், ஒருமைப்பாடும் உடைய ஒரு புதுமைச் சமுதாயமாகத் தயாரித்திடுவதற்குப் பயன்படக் கூடிய ஒரே ஒரு பேராயுதம் இந்த ஆடல்வல்லான் சிலையே, இந்த ஆடல்வல்லான் சிலையே, இந்த ஆடல்வல்லான் சிலையே என்றால் அது மிகையாகாது. அதாவது மதவழிப் புரட்சிக்கு நம்பிக்கையும், தெம்பும் இந்த கூத்தர்ப் பெருமானின் சிலையே, இந்த கூத்தர்ப் பெருமானின் சிலையே, இந்த கூத்தர்ப் பெருமானின் சிலையே.

**1. "ஆடல் வல்லான் சிலை பதினெண்சித்தர்களின் தத்துவ விளக்கமே."**

**2. "கூத்தர் பெருமான் சிலை அமைப்பு பதினெண்சித்தர்களின் கருத்தாழமிக்க கலைப் படைப்பின் உயரிய அரிய நிலையே."**

**3. "நடராாசர் சிலை பதினெண்சித்தர்களின் செயல்நிலைச் சித்தாந்தத்தின் தத்துவ விளக்கமே."**

**4. "பதினெண்சித்தர்களின் சிவ தாண்டவமூர்த்திச் சிலை அண்டபேரண்ட இயக்க விளக்கமே."**

**5. "சிவபெருமானின் நடனக்கோலச் சிலை பதினெண்சித்தர்களின் அருளுலக விளக்கமே."**

....... என்ற இந்த ஐந்து 'கருத்து விளக்கச் சுருக்க வாசகங்கள்' (definitions) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எழுதி வரும் குரு பாரம்பரியத்திலும் (The Religious History), இலக்கிய பாரம்பரியத்திலும் (History of the Language and Literature), அரச பாரம்பரியத்திலும் (The Political History), மற்ற வாக்குகளிலும், வாக்கியங்களிலும்,

வாசகங்களிலும் பல இடங்களில் வருகின்றன. எனவேதான், **'இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!'**, **'சித்தர்நெறியைப் புரிந்து கொள்ளுங்கள்!'**, **'பதினெண்சித்தர் தத்துவத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!'** என்ற தலைப்பின் கீழ் கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக எண்ணற்ற அறிவிப்புக்களும், அறிக்கைகளும், அறிவிக்கைகளும், சிறிய பெரிய கட்டுரைகளாகவும், நூல்களாகவும் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

இப்படி இடையறாது முயன்றும் கூடப் பிறமண்ணினரான பிராமணர் எனும் வடஆரியர்கள் தங்களுடைய சமசுக்கிருத வேத புராண இதிகாசங்களை துணை வைத்துக் கொண்டு தொடர்ந்து தவறான கருத்துக்களையே பரப்பி வருகிறார்கள். இதனால், மெய்யான இந்துமதத்தில் கலக்கங்கள், குழப்பங்கள், மயக்கங்கள், தேக்கங்கள், முடக்கங்கள், அடக்கங்கள், ஒடுக்கங்கள், நடுக்கங்கள், தவறான திசை திருப்பல்கள், பயனற்ற கற்பனைகள் முதலியவைகள் வளர்ந்து; பொதுவாகவே இந்து மதம் என்றால் பயனற்ற கற்பனைகளும், பொய்க் கதைகளும், புரியாமைகளும், அறியாமைகளும் நிறைந்த ஒன்று என்ற கருத்து நிலை பெறும்படிச் செய்து விட்டார்கள். எனவேதான் சில ஆயிரம் பக்கங்களில் எழுதி வைத்திருக்கும் இந்த நடராசர் சிலை பற்றிய விளக்கங்களின் சாரமாக இந்தக் கருத்துக் குறிப்பு வெளியிடப் படுகிறது.

இந்த நடராசர் சிலை **'ஐந்தொழில் வல்லான் சிலை'** என்றே ஏடுகளில் சிறப்பாகக் குறிக்கப் படுகிறது. அதாவது, இறைவனுக்குரிய ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழில்களின் விளக்கமாகத்தான் இந்த ஆடல்வல்லான் சிலை உருவாக்கப் பட்டது.

1) வலக் கையில் உள்ள உடுக்கை ஒலி = **ஆக்கல் தொழிலை** விளக்குகிறது.

2) இரண்டாவது வலது கையின் வாழ்த்துகின்ற தோற்றம் = **காத்தல் தொழிலைக்** குறிக்கிறது.

3) மேல் இடக் கையில் உள்ள சுடர் நெருப்பு = **அழித்தலைக்** குறிக்கிறது.

4) கீழ் இடக் கையும், முயலகனை மிதிக்கும் வலது காலும் = **மறைத்தலைக்** குறிக்கிறது.

<u>**குறிப்பு**</u>:- கீழ் இடக் கை மட்டும்தான் **மறைத்தலைக்** குறிக்கின்றது என்றும், முயலகனை மிதிக்கும் வலது கால் கொடியனவற்றை **ஒடுக்குதல்** என்ற தத்துவத்தைக் குறிக்கின்றது என்றும் பதினெண்சித்தர்களின் வாக்குகளிலும், வாக்கியங்களிலும், வாசகங்களிலும், நான்மறைகளிலும் மிகத் தெளிவாக குறிக்கப் படுகின்றன. அதாவது, **நமசிவாய** என்ற ஐந்தெழுத்து; **நமச்சிவாய** என்ற ஆறு எழுத்தாக வடிவப்படும் போது இந்த நடராசர் சிலை ஆறு வகை இறைமைச் செயல் நிலை விளக்கத்தை வழங்குகிறது.

5) இடக் காலின் தூக்கிய திருவடி = **அருளுதல்** எனும் தத்துவத்தை விளக்குகிறது. இந்த இடக் கால் 'தூக்கிய திருவடி' அல்லது 'குஞ்சித பாதம்' எனப்படும். வலக் கால் 'அனைத்தையும் ஒடுக்கி மறைக்கின்ற ஆடிய பாதம்' எனப்படும். அதாவது இந்த பாதம் 'ஆடி ஓய்ந்து கீழே நிற்கின்ற பாதம்' எனப்படும். சிறப்பாக, முயலகனின் (அரக்கன்) ஆட்டங்களை எல்லாம் 'அடக்கிய பாதம்', 'ஒடுக்கிய பாதம்', 'அவனால் விளைந்த அச்சங்களையெல்லாம் மறைத்த பாதம்' அல்லது 'அழித்த பாதம்' எனப்படும்.

இப்படி 1. ஆக்கல் 2. காத்தல் 3. அழித்தல் 4. ஒடுக்குதல் அல்லது மறைத்தல் 5. அருளல் என்று ஐந்து தொழில்களைச் செய்யும் இறைவனின் நிலையை விளக்கும் இந்த நடராசர் சிலை **'ஐந்தொழில் வல்லான் சிலை'** அல்லது **'ஐந்தொழில் வல்லான் நிலை'** என்று சிறப்பிக்கப் படுகிறது.

# நமசிவாய + நமச்சிவாய விளக்கம்

ஐந்தொழில் வல்லான் நிலை ஒரு சிலையாக வடிக்கப்பட்ட நடராசர் சிலையைப் பற்றி விளக்கினோம். அடுத்து இதே நடராசர் சிலை நமச்சிவாய என்ற சொல்லுக்கு உரிய விளக்கமாகவும் விளக்கிக் காட்டிடுவோம்.

**ந - ஆக்கல் - வலது மேல்கை**
**ம - காத்தல் - வலது கீழ்க்கை**
**சி - அழித்தல் - மேல் இடக்கை**
**வா - மறைத்தல் - கீழ் இடக்கை**
**ய - அருளுதல் - தூக்கிய இடக்கால்**
**ச் - ஒடுக்குதல் - ஊன்றிய வலது கால்**

இப்படி ஐந்தொழில் வல்லான் சிலை ஆறு தொழில்களை விளக்கக் கூடிய ஒன்றாகவும் இருக்கிறது.

**குறிப்பு**:- இதைத்தான் பதினெண்சித்தர்கள், 'ஐந்தும் ஆறும் அறியாதவன்', 'ஐந்தை ஆறாக்கத் தெரியாதவன்', 'ஐந்தும் ஆறும் ஒன்றென உணரத் தெரியாதவன்'... என்று குறிக்கிறார்கள்.

நடராசர் சிலை சிவபெருமானின் தத்துவ விளக்கத் தோற்றம்தான். எனவேதான், இதில் சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள் செதுக்கிக் காட்டப் படவில்லை. ஆனால், இந்த நடராசர் சிலையை ஐந்து வகையான வண்ணமுடையனவாக வண்ணப் பூச்சு பூசியோ; அல்லது ஐந்து வகையான பொருள்களில் செய்தோ பூசையில் வைப்பதின் மூலம் நடராசர் சிலைக்கு ஐந்து முகங்களும், அவற்றுக்குரிய தொழில்களும் விளக்கப்பட்டு விடுகின்றன. இது பற்றி குருபாரம்பரியத்தில் நிறைய தத்துவ விளக்கங்களும், சித்தாந்த விளக்கங்களும் இருக்கின்றன.

ஆனால், 'ஐந்தொழில் வல்லான் நிலை விளக்கம் குருவழிக் காண்க'; 'ஐந்தொழில் வல்லான் நிலை செவியருகே குவிந்த இதழின்

உதிரும் நிலை போன்ற மெல்லிய ஓசையுடைய சொற்களால் மட்டுமே வழங்கப் படல் வேண்டும்'; 'மிகுந்த தரமும், திரமும், அறமும், பாரம்பரியம் கடந்த பக்குவமுடைய தக்காருக்கு மட்டுமே ஐந்தொழில் வல்லான் நிலை அருளப்படல் வேண்டும்'; 'குருவழியாக ஐந்தொழில் வல்லான் நிலை விளக்கம் உணர்ந்து வழிபடுபவர் கருநிலை கடப்பர்' .... என்று **சட்டதிட்டக் கட்டுப்பாட்டு வாசகங்களை** வழங்கி யிருக்கிறார்கள் பதினெண்சித்தர்கள்.

இருந்த போதிலும், இராசிவட்ட நிறைவுடையாராகத் தோன்றியிருக்கும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் பதினெண்சித்தர் பீடாதிபதிக்குரிய அருட்பட்டங்களை அறுபத்து நான்கு பட்டங்களுக்கு மேலே சித்தி செய்து அடைந்ததாலும்; அரசயோகம் செய்து கால் நூற்றாண்டு காலத்திற்கு மேலாக 'ஒளிவில் ஒடுக்க நிலையில்' வாழ்ந்து, இல்லறத்தார் மூவர் துணையிருக்க அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் என்ற நிலையை அடைந்துள்ளார் என்பதாலும் **மேற்படி சட்டதிட்டக் கட்டுப்பாட்டு வாசகங்களைக் கடந்து** இவ் விளக்கத்தை வழங்குகிறார்.

மேலும், இவர் அருளுலகத்தார்களாலும், பொருளுலகத்தார்களாலும் ஒரு மனதாக குருதேவர், இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், ஞானகுரு, தேவகுரு, அசுரகுரு, அருளாட்சி நாயகம் ... எனப்படும் நிலைகளை யெல்லாம் பதினெட்டாண்டு காலப் பயிற்சியாலும், பதினெட்டாண்டு கால முயற்சியாலும் சித்தியாக்கியுள்ளதை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதால் விண்ணையும், மண்ணையும் இணைக்கும் மாபெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்.

இந்த மாபெரும் முயற்சிக்கு பல நிலைத் தேர்ச்சியுடைய சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், சித்தர் நெறி ஆர்வலர்கள், சித்தர் நெறி ஆதரவாளர்கள், சித்தர் நெறி விருப்பாளர்கள், சித்தர் நெறி காப்பாளர்கள்... முதலிய பல

வகையினரையும் உருவாக்குவதற்காகவே பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்குரிய சட்ட திட்டக் கட்டுப்பாடுகளையும், மரபுகளையும், முறைகளையும், நெறிகளையும் கடந்து இது போன்ற பேருண்மைகளை அருட்கொடையாக வாரிவாரி வழங்குகின்றார். எனவே, இதனை நம்மவர்கள் நன்கு பலருக்கும் தெரிவித்தல் வேண்டும்.

இது போன்ற பல செய்திகளும், கருத்துக்களும் நமது மாத மலரான குருதேவர் அறிக்கையில் வெளி வருவதால் நம்மவர்கள் பெரிதும் முயன்று பேரூர், சிற்றூர், கிராமம், குக்கிராமம் என்று எல்லா இடங்களிலும் இந்த அறிக்கையையும், அருளையும், அருளூறு பூசனைப் பொருள்களையும் பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும். அப்பொழுதுதான் **கருத்துப் புரட்சி**, **எண்ணப் புரட்சி**, **சிந்தனைப் புரட்சி** முதலிய பல புரட்சிகள் விளைந்து **முழுமையான பண்பாட்டுப் புரட்சி** (The Total Cultural Revolution) அறுவடைப் பயனாகத் தந்திடும் நிலை உருவாகிடும்.

அந்த நிலையின் அடிப்படையில்தான் **மெய்யான இந்துமதம்** மறுமலர்ச்சியும், வள வளர்ச்சியும், ஆட்சி மீட்சியும், உரிமைச் செழிச்சியும், பெருமை உயர்ச்சியும் அடைந்திடும், அடைந்திடும், அடைந்திடும். அதற்குரிய முயற்சிகளைச் செய்பவர்களுக்கு வழங்கிடும் பயிற்சிகளாகத்தான் குவலய குருபீடம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூராரின் அருட்கொடைகள் வளர்ந்து வருகின்றன. இதனை நம்மவர்கள் புரிந்தும் புரிய வைத்தும் செயல்பட வேண்டும்.

## திசைகளும் - நடராசர் சிலையின் நிறங்களும்

**வடகிழக்குத் திசை**யான ஈசான திசையை நோக்கி வைக்கப்படும் நடராசர் சிலை **பளிங்கு நிற**முடையதாக இருக்க வேண்டும் அல்லது **பளிங்குக் கல்**லிலே செதுக்கப் பட்டிருக்க வேண்டும்.

**குறிப்பு**:- பளிங்கு நிறத்திற்கு படிகம், வெள்ளைக்கல், கூழாங்கல், கடலாழத்திலும் இமயமலையின் முடியிலும் கிடைக்கக் கூடிய மன்மதக்கல் முதலிய கற்களும் பயன் படுத்தப்படலாம்.

**கிழக்குத் திசை**யை நோக்கி வைக்கப்படும் நடராசர் சிலை **பொன்னிற**முடையதாக இருக்க வேண்டும் அல்லது **பொன்னால்** செய்யப் பட்டிருக்க வேண்டும்.

**தெற்கு திசை**யை நோக்கி வைக்கப்படும் நடராசர் சிலை **கருமை நிற**முடையதாக இருக்க வேண்டும் அல்லது **இரும்பினால்** செய்யப் பட்டிருக்க வேண்டும்.

**மேற்கு திசை**யை நோக்கியிருக்கும் நடராசர் சிலை **வெண்மை நிற**முடையதாக இருக்க வேண்டும் அல்லது **வெள்ளி**யினால் செய்யப் பட்டிருக்க வேண்டும்.

**வடக்குத் திசை**யை நோக்கியிருக்கும் நடராசர் சிலை **சிவப்பு நிற**முடையதாக இருக்க வேண்டும் அல்லது **செம்பினால்** செய்யப் பட்டிருக்க வேண்டும்.

1. தென்கிழக்கு திசை, 2. தென்மேற்கு திசை, 3. வடமேற்கு திசை என்ற மூன்று திசைகளையும் நோக்கியிருக்கும் நடராசர் சிலை என்னென்ன நிறத்திலிருக்க வேண்டும் என்பதும்; என்னென்ன பொருள்களால் செய்யப்பட வேண்டுமென்பதும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளைத் தவிர வேறு யாரும் அறிந்து கொள்ளக் கூடாது என்ற சட்டதிட்டக் கட்டுப்பாட்டை மட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால், இந்தப் பேருண்மையைத் தெரிந்து கொண்டவர்கள் அசுர சத்தி பெற்றவர்களாகவும் மாறி மிகப் பெரிய அழிவுச் சத்திகளாகி விடுவார்கள். இதில், ஐயமே இல்லை! ஐயமே இல்லை! ஐயமே இல்லை!

**குறிப்பு**:- மறை = இரகசியம்.

ஏனெனில், அருளாட்சி நாயகம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களுக்கு மேலே குறித்த பேருண்மையின் அடிப்படையில் எண்ணற்ற கடுமையான, கொடுமையான தோல்வி அனுபவங்கள் உண்டு. அதாவது, இவர் உருவாக்கியவர்களில் கணக்கற்றோர்; கண்ணற்றவர்களாக, கருத்தற்றவர்களாக, குறுகிய சுயநல வெறியர்களாக, பேராசைக் காரர்களாக, அரக்க மனம் உள்ளவராக, மந்திரவாதித் தொழில் செய்வோராக, குருமொழி கேளாச் சீடர்களாக மாறியிருக்கிறார்கள், மாறியிருக்கிறார்கள், மாறியிருக்கிறார்கள்.

இன்றும் கூட, இவரால் உருவாக்கப் பட்டவர்களில் கணிசமான அளவினர்; பணம், பதவி, புகழ், அதிகாரம், ஆணவம், அகம்பாவம், வீம்பு, முரட்டுப் பிடிவாதம் ..... முதலியவைகளால் வீணாகிக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவேதான், மிகப் பெரிய, அரிய, உரிய சத்திகளைத் தரக்கூடிய பேருண்மைகளை யெல்லாம் பாரம்பரிய மரபுப் படியும், விதிப் படியும், சட்டதிட்டக் கட்டுப்பாட்டுப் படியும் வெளியிடாமல் மறைத்து வைக்கும் செயலை அருட்கொடை வள்ளலே செய்ய நேரிட்டு விட்டது. இதைவிட வேறு வழியே இல்லை.

அதாவது, எல்லாக் காலங்களிலுமே குருமொழிக் கேளாதவர்கள்; குருவிடமிருந்து விலகியும், ஒதுங்கியும், பதுங்கியும், மறைந்தும் செயல்படக் கூடியவர்கள்; குருவை மறந்தும், துறந்தும் செயல்படக் கூடியவர்கள், குருவை ஏமாற்றியும், தூற்றியும் செயல்படக் கூடியவர்கள் ... என்போர்கள் தோன்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதனை அநுபவத்தால் உணர்ந்துதான் அருளாட்சி நாயகம், அரசயோகி அடிக்கடி ஆமையாகவும், ஊமையாகவும், இலைமறை காயாகவும் வாழ நேரிட்டு விடுகின்றது.

மேற்படி நடராசர் சிலை; ஒவ்வொரு திசைக்கும் ஏற்ப ஒவ்வொரு வகையான பலிபொருளைப் படையலாகப் பெறுகின்றது. பொதுவாக,

எல்லா நடராாசர் நிலையும் பச்சைக் குருதியால் நீராட்டப் பட்டுத்தான் புத்துயிர்ப்புச் செய்யப்படல் வேண்டும். சிறப்பாக, வெள்ளாட்டின் குருதி பயன்படுத்தப் படல் மரபு. ஆனால், பறவைகள், மீன், விலங்குகள் முதலியவற்றின் குருதியால் நீராட்டப் படுதல் சிறப்பாகும்.

**வடகிழக்கு திசை**யை நோக்கியிருக்கும் நடராாசருக்கு நெய்அடிசிலும், சமைக்கப்பட்ட இறைச்சியுணவும் படையலாகும்.

**கிழக்கு திசை**யை நோக்கியிருக்கும் நடராாசர் சிலைக்கு தயிர் அடிசிலும், சுட்ட இறைச்சியுணவும் படையலாகும்.

**தெற்கு திசை**யை நோக்கியிருக்கும் நடராாசர் சிலைக்கு எள் அடிசிலும், வேகவைத்த இறைச்சியும் படையலாகும்.

**மேற்கு திசை**யை நோக்கியிருக்கும் நடராாசர் சிலைக்கு சர்க்கரை அடிசிலும், பச்சை இறைச்சியும் படையலாகும்.

**வடக்கு திசை**யை நோக்கியிருக்கும் நடராாசர் சிலைக்கு பால் அடிசிலும், குருதிப் பொரியலும் படையலாகும்.

இந்த ஐந்தையும் சித்தி செய்து கொள்வதற்கு நெல், மஞ்சள், பூ, வில்வ இலை (அல்லது ஆலிலை, அரச இலை, பலா இலை முதலிய மூன்று மர இலையும் பயன்படுத்தப் படலாம்) எனும் நான்கினால் அருட்சினை செய்ய வேண்டும். மற்ற மூன்று திசைகளுக்கும் உரிய நடராாசர்களுக்கு என்னென்ன படையல் பொருள்? அருட்சினை பொருள்? என்பதை வெளியிட முடியாததற்கு வருந்துகிறார் குருதேவர்.

-----------------------

**//இந்தக் கட்டுரைத் தொகுப்பு குருதேவர் அறிக்கை 35 முதல் 39 வரை வெளியான தொடர் கட்டுரைகளைச் சேர்த்து உருவாக்கப்பட்டது.//**

# மதுரை மாமூதூர் மீனாட்சியம்மன் ஆலயம்

1. இன்றைக்கு பல கோபுரங்களோடு விரிந்து பரந்து கிடக்கின்ற ஆலவாய் மதுரை மாமூதூர் மீனாட்சியம்மன் ஆலயம் தோன்றி வளர்ந்த வரலாறு (1985ஆம் ஆண்டாகிய) இன்றோடு 43,73,086 ஆண்டுகள். எனவே, இதனுடைய முழுமையான வரலாற்றை விளக்க ஆயிரக்கணக்கான பக்கங்களையுடைய தொகுதிகளாகப் பல தொகுதிகள் வெளியிட நேரிடும். எனவே, இன்றைய மக்களின் ஆர்வத்தையும், அறிவியல் உணர்வையும், ஆராய்ச்சிப் போக்கையும், மெய்யான இந்து சமயத்தின் தொன்மையைப் பற்றிய பெருமித உணர்வையும் ஊக்குவிக்கும் வண்ணமே இந்தச் சுருக்க விளக்க அறிமுக முன்னுரைக் கட்டுரை எழுதப்படுகிறது.

2. இந்தக் கட்டுரைக்குத் தேவையான செய்திகள் அனைத்தும் 1) எழுதாக் கிளவிகளாக உள்ளவைகளிலிருந்தும்; 2) எழுதி மறையாக மறைத்துக் காக்கப் படுபவைகளிலிருந்தும்; 3) முறையாகக் குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் வழங்கப் பட்டு வருபவைகளிலிருந்தும்; 4) நெறியாகச் செயல்வடிவில் மட்டும் விளக்கப் படுபவைகளில் இருந்தும்; 5) தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் உரிய பக்குவப் படுத்தப்பட்ட, எளிதில் பயன்படும்படி பதப் படுத்தப்பட்ட இலக்கியமாக வழங்கப் படும் வேதங்களிலிருந்தும்; 6) இருபத்தியேழு வண்ண இலக்கியங்களாக இருக்கின்ற கதைகள், காதைகள், காவியங்கள் (காப்பியங்கள்), கீதைகள் எனப்படும் நான்கு வகை இலக்கியங்களிலிருந்தும்; 7) புராண இதிகாசங்களிலிருந்தும்; 8)பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் மட்டுமே எழுதப்பட்டு வரும் குரு பாரம்பரியம், அரச பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் எனும்

மூன்று வகையான இலக்கியங்களிலிருந்தும்; 9) வாக்கு, வாக்கியம், வாசகம் எனப்படும் பதினெட்டு வகையான இலக்கியங்களிலிருந்தும் ... தரப் படுபவைகளாகும்.

3. நூல்வடிவில் இல்லாமல் பதினெண்சித்தர்கள், பதினெட்டாம்படிக் கருப்பர்கள், பதினெண்சித்தர் பீடாதிபதிகள்; நாற்பத்தெட்டு வகைச் சித்தர்கள்; நாற்பத்தெட்டு வகைப் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள்; பதின்மூன்று வகைக் கருவழி ஆச்சாரியார்கள்; பதின்மூன்று வகைக் குருவழி ஆச்சாரியார்கள்; நாற்பத்தெட்டு வகை வழிபடு நிலையினர்கள்; நாற்பத்தெட்டு வகை அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள்; நாற்பத்தெட்டு வகை மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள் முதலியோர்களும்; இவர்களின் கருவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளும் பல்வேறு காலங்களில் பல்வேறு கருத்துப் பற்றி எழுதிய குறிப்புக்களில் மதுரை மாநகர், மதுரை மூதூர், மதுரை மாமூதூர், ஆலவாய்த் திருநகர், ஆலவாய் மதுரை மாமூதூர் ... பற்றிய குறிப்புக்களும் நிறைய இருக்கின்றன. இவைகளையும் அடிப்படையாகக் கொண்டுதான் **மெய்யான இந்துமத**மெனும் மரத்திற்கு இன்றுள்ள ஆணிவேர் போன்ற மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தைப் பற்றிய செய்திகளை வெளியிடுகிறோம்.

4. **மெய்யான இந்துமத** வரலாற்றுப்படி தொன்மதுரை, தென்மதுரை, மதுரை, வடமதுரை, மாணுமதுரை ... என்று ஐந்து மதுரைகள் குறிக்கப் படுகின்றன. இவற்றுள் பஃறுளி ஆற்றங்கரையிலிருந்த தொன்மதுரையும், குமரி ஆற்றங்கரையிலிருந்த தென்மதுரையும், வைகை ஆற்றங்கரையிலுள்ள மதுரையும்தான் மீனாட்சியம்மன் ஆலயம் என்ற ஒன்றினைப் பெற்றிருக்கின்றன. மேலும், இம்மூன்று நகர்கள் மட்டும்தான் திருநகர், மாமூதூர், ஆலவாய் ... என்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றிருக்கின்றன.

இந்த மூன்று நகரங்களும் மூன்று எல்லைகளாகக் கொண்டு ஒரு முக்கோண வடிவச் சத்திபீடம் இளமுறியாக் கண்டம் எனும்

குமரிக் கண்டத்தில் அருளாட்சிக்காக உருவாக்கப் பட்டன. அதாவது, இன்றைய விந்திய மலையிலிருந்து தெற்கே சுமார் ஏழாயிரம் (7000) கல் தொலைவு நீளமும், நாலாயிரம் (4000) கல் தொலைவு அகலமும் உள்ள மிகப்பெரிய நிலப் பரப்பாகவே இருந்திருக்கின்றது இளமுறியாக் கண்டம். இந்தக் கண்டமே இம்மண்ணுலகில் நீருக்குள்ளிருந்து வெளிப்பட்ட முதல் பெருநிலப் பரப்பாகும்.

இன்றைக்கு இந்து மாக்கடல் என்றுள்ள தண்ணீர்ப் பரப்பு அனைத்துமே ஒரு காலத்தில் இன்றைய தென்னிந்தியாவோடு சேர்ந்து ஒரு மிகப் பெரிய நிலப் பரப்பாக இருந்திருக்கின்றன. அது படிப்படியாக முதல் கடல்கோளில் தொன்மதுரையோடும், இரண்டாவது கடல்கோளில் தென்மதுரையோடும் கடலுக்குள் மூழ்கி விட்டது. அந்தக் குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதிகளில் மிகப் பெரிய பகுதியாக இருப்பதுதான் தென்னிந்தியா என்று சொல்லப்படும் விந்திய மலை முதல் குமரி வரையுள்ள நிலப்பகுதி.

எனவே, இம்மண்ணுலகின் முதல் மனிதர்களான தமிழர்களின் பாரம்பரிய வாரிசுகளே இன்றுள்ள தென்னிந்தியர்கள்; இம்மண்ணுலகில் முதல் மதமான பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்தின் மூலச் சத்திபீட மூன்று கோயில்களுள் ஒன்றே இன்றுள்ள ஆலவாய் மதுரை மாமூதூர் தேவி மீனாட்சியம்மன் **ஆலயம்**. இது கோயிலல்ல! ஏனெனில் நாடோடிப் பாடல் எனப்படும் பிற்காலச் சித்தர்களின் பாடல்களில்,

**ஆலயம் கோயிலாச்சுதடி குதம்பாய்!**
**கோயில் ஆலயமாச்சுதடி குதம்பாய்!**
**மயில் குயிலாகக் கூவுதடி குதம்பாய்!**
**குயில் மயிலாக ஆடுதடி குதம்பாய்!**
**கோலமிட்டென்ன ஓலமிட்டென்ன குதம்பாய்!**
**ஆலவட்டம் போடுதடி அத்துனையும் குதம்பாய்!**
**அறிவதேது புரிவதேது இனிமேல் குதம்பாய் ...**

என்ற புலம்பல் காணப் படுகிறது. இது பற்றிய ஆராய்ச்சிக் கருத்துக்களை விரிவஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம்.

5. மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்துக்கு உரிய அருளூறு வாசகங்களில் [மந்தர, மந்திற, மந்திர, மாந்தர, மாந்தரீக, தந்திர, தந்தர, தந்திற, தாந்தர, தாந்தரீக, எந்தர, எந்திர, எந்திற, ஏந்தர, ஏந்தரீக, பூசை, தவம், வேள்வி முதலியவைகளுக்குரிய அத்திரங்கள், சாத்திரங்கள், சூத்திரங்கள், நேத்திரங்கள், நேம, நியம, நிடத, நிட்டை, நீதிகள், சுருதி, ஆரண, மீமாம்சைகள் முதலியவற்றின் வாசகங்கள்] மீனாட்சியம்மனைப் பற்றிக் குறிக்கும் சொற்கள் இன்றுள்ள மீனாட்சியம்மன் ஆலயத்துக்குள் எத்தனை எத்தனை மீனாட்சிகள், சொக்கிகள், சொக்கேசுவரிகள், அங்கயற்கண்ணிகள், அங்கயற் கண்ணேசுவரிகள், அங்கயற்கன்னிகள், அங்கயற்கன்னீசுவரிகள், [*கன்னேசுவரிகள்* என்ற பாடவேறுபாடு உண்டு] ஆலவாய் அழகிகள், மீனாட்சி-சுந்தரேசுவரர்கள், அங்கயற்கண்ணிகள்-கண்ணன்கள், அங்கயற்கன்னிகள்-கன்னன்கள், அங்கயற்கண்ணீசுவரிகள்-கண்ணீசுவரர்கள், அங்கயற்கன்னீசுவரிகள்-கன்னீசுவரர்கள், ஆலவாய் அழகிகள்-அழகன்கள்; இவர்களல்லாமல் பழைய சொக்கிகள்-சொக்கன்கள் ... எனப்படும் வழிபடுநிலையினர் இருக்கிறார்கள் என்பதனைப் பட்டியலிடப் புகுந்தாலே போதும்; நான்கு யுகத்தின் சமய சமுதாய கலை இலக்கிய அரசியல் வரலாறுகள்; பண்பாட்டு வளவளர்ச்சி வரலாறுகள்; புறநாகரீக அறிவியல் வளர்ச்சி வரலாறுகள் மிகமிகத் தெளிவாக விளக்கப்பட்டு விடும்! விளக்கப்பட்டு விடும்! விளக்கப்பட்டு விடும்!

இன்னும் சொல்லப் போனால், பதினெண்சித்தர்கள் குறிக்கின்ற மீதிக்காலம், பாதிக்காலம், ஆதிக்காலம், அனாதிக்காலம் என்கின்ற நான்கு காலங்களிலுமே இன்றுள்ள மீனாட்சியம்மன் ஆலயம் இருந்திருக்கிறது. அதாவது, நான்கு யுகங்களாகவும் இந்த ஆலயம் இருந்து வந்திருக்கிறது. இது விந்திய மலைக்கு வடக்கேயுள்ள

மண்ணுலக மலைகளின் அரசனாக விளங்குகின்ற இமயமலை தோன்றுவதற்கு முன்பிருந்தே **மெய்யான இந்துமத**த்தின் அருளாட்சித் தலைமைப்பீட ஆலயமாக இருந்து வருகின்றது. விரிவஞ்சி இது பற்றி இத்துடன் நிறுத்துகிறோம்.

6. இன்றுள்ள உயரிய கோபுரங்களும் சுற்றுமதில்களும், பெரிய பெரிய மண்டபங்களும் பிற்காலச் சோழப் பேரரசின் காலத்திலிருந்து படிப்படியாக வளர்ச்சி பெற்ற ஒன்றே ஆகும். அதாவது, தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் மெய்யான இந்துமதத்தின் மறுமலர்ச்சிக்காகவும், வளவளர்ச்சிக்காகவும், வலிமைச் செழிச்சிக்காகவும், ஆட்சிமீட்சிக்காகவும் கருவறை மேல் நெடுங்கோபுரம் அமைத்து; முதன்முதல் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டி முடித்ததுமே எதிர்பார்த்த வெற்றிகள் உருவாகாமல் போனதினால்; நுழைவாயில்களின் மேல் நெடுங்கோபுரம் அமைத்திட ஆணையிட்டுச் சென்றதை யொட்டித்தான் தென்னாட்டிலுள்ள அனைத்து வழிபாட்டு நிலையங்களிலும் [இந்த வழிபாட்டு நிலையங்கள் ஆலயம், கோயில், பீடம், திருப்பதி ... என்று நாற்பத்தெட்டு வகைப்படும். இவையல்லாமல், கருவறை என்ற பெயரில் உள்ள வழிபாட்டு நிலையங்கள் 48 வகைப்படும்] சுற்றுமதில் நுழைவாயில்களின் மேலும், மண்டபங்களின் மேலும் நெடிய கோபுரங்கள் கட்டப்படும் மரபு தோன்றியது. எனவே, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் அருட்பணி விரிவாக்கத் திட்ட அமைப்புப் பணிகள் ... இந்த மீனாட்சியம்மன் ஆலயத்திலும் நிலையாக இருக்கின்றன.

7. **மெய்யான இந்துமதம்** தோற்றுவிக்கப் படுவதற்கு எடுத்துக் கொண்ட காலம் வரையறைக்கு அப்பாற்பட்டு விரிந்து கிடக்கின்றது. அதாவது, இளமுறியாக் கண்டம் முழுவதும் சுற்றிப் பார்த்து எங்கெங்கு அருள் ஊற்றுக்கள் தென்பட்டனவோ; அந்த அருள் ஊற்றுக்களையெல்லாம் முறையாக ஆராய்ந்து அவற்றின் தன்மைகளுக்கேற்ப நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டு

நிலையங்களுள் ஏதாவதொரு வழிபாட்டு நிலையத்தை குறிப்பிட்ட அருளூற்றின் மீது உருவாக்கினர்கள். இதேபோலவே, எல்லாவிதமான பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் நன்மை பயக்கும் வண்ணம் நாற்பத்தெட்டு வகையான வெட்டவெளிக் கருவறைகளையும் உருவாக்கினர்கள்.

இவற்றால்தான் விண்ணுலகுக்கும் மண்ணுலகுக்கும் மிகமிக நெருக்கமான தொடர்புகளும், உறவுகளும், உரிமைகளும் நிலைபேறு பெற்றன. விண்ணுலகிலிருந்து அனைத்து வகையான தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும், மற்றவர்களும் தங்களுடைய அண்டபேரண்டமாளும் மெய்ஞ்ஞான அறிவாலும், விஞ்ஞான அறிவாலும், அருளாற்றலாலும், அருளுலகக் கலைகளாலும், பொருளுலகக் கலைகளாலும் இம்மண்ணுலகில் தோன்றிய அனைத்து வகையான பயிரினங்களையும், உயிரினங்களையும் வரிசைப்படுத்தி மானுட வாழ்க்கையை வளப்படுத்தினர்கள்.

அதாவது, பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும், நாற்பத்தெட்டு வகை வழிபடு நிலையினர்களும், நாற்பத்தெட்டு வகை உருவ அருவ அருவுருவங்களும் மனித வாழ்வோடு இரண்டறக் கலந்து **மெய்யான இந்துமத** வாழ்வை உருவாக்கினர்கள். இப்படி விண்வெளியிலிருந்து வந்தவர்களே இந்த மண்ணுலகில் கல் மட்டும் தோன்றி மண் தோன்றாமல் இருக்கும் ஆரம்பக் காலத்திலிருந்தே தொடர் முயற்சியாகப் பல நூறாயிரக் கணக்கான ஆண்டுகளாகச் செயல்பட்டுத்தான் **மெய்யான இந்துமத**த்தை இம்மண்ணுலகில் நிலைநாட்டினர்கள்.

இந்த **மெய்யான இந்துமதம்** என்பதுதான் நாம் காணுகின்ற பரந்த விண்வெளியில் கணக்கற்று மின்னுகின்ற விண்மீன்கள் நிறைந்த பரந்து விரிந்த விண்வெளியிலுள்ள நூற்றியெட்டு திருப்பதி அண்டங்களையும், இருநூற்று நாற்பத்திமூன்று சத்தி அண்டங்களையும்,

ஆயிரத்தெட்டுச் சிவாலய அண்டங்களையும் இணைத்து அருளாட்சி நடத்தும் சமய சமுதாய அரசியல் தத்துவமும் சித்தாந்தமும் ஆகும். இந்த **மெய்யான இந்துமத**த்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும், இயக்குனர்களாகவும் இருப்பவர்களே காலங்கள் தோறும் அனைத்து உலகங்களிலும் தோன்றித் தோன்றிச் செயல்படுகின்ற (1) பதினெண்சித்தர்கள், (2) பதினெட்டாம்படிக் கருப்பர்கள், (3)நாற்பத்தெட்டு வகை வழிபடு நிலையினர்கள், (4) நாற்பத்தெட்டு வகை கருவறை மூலவர்கள், (5) நாற்பத்தெட்டு வகை வெட்டவெளிக் கருவறை மூலவர்கள், (6) நாற்பத்தெட்டு வகைச் சித்தர்கள், (7)நாற்பத்தெட்டு வகை அருளாளர்கள், (8) நாற்பத்தெட்டு வகை அருளாளிகள், (9) நாற்பத்தெட்டு வகை அருளாடு நாயகங்கள், (10) நாற்பத்தெட்டு வகை அருட்பட்டத்தவர்கள், (11) பதின்மூன்று வகை குருவழி ஆச்சாரியார்கள், (12) பதின்மூன்று வகைக் கருவழி ஆச்சாரியார்கள், (13) நாற்பத்தெட்டு வகை பதினெண்சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள், (14) நாற்பத்தெட்டு பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எனப்படும் பதினான்கு வகையினர்கள் ஆவார்கள்.

8. இதேபோல் இந்த **மெய்யான இந்துமத**த்துக்கு ஆட்சிமொழியாகவும், பரந்து விரிந்து பட்டுள்ள அண்டபேரண்டங்கள் அனைத்தையும் இணைக்கின்ற **அருளுலக ஆட்சிமொழியாகவும் இருப்பதே அமுதத் தமிழ்**. இது செந்தமிழ், தீந்தமிழ், தெய்வத் தமிழ், கடவுட்டமிழ், பைந்தமிழ், ஒண்டீந்தமிழ், வண்டமிழ், இன்றமிழ், மென்றமிழ் ... என்று நாற்பத்தெட்டு வகையான சிறப்புச் சொற்களால் சிறப்பிக்கப் படுகின்றது. இதனுடைய ஒவ்வோர் எழுத்தும் அருளாற்றலை உருவாக்கித் தரும் மந்திற, எந்திற, தந்திறச் சக்கரங்களாகவே இருக்கின்றது. இதனுடைய ஒவ்வொரு சொல்லும் உயிர்ப்புத் தன்மையும், புத்துயிர்ப்பு ஆற்றலும் உடையதாக இருக்கின்றது. இதுவே, அண்டபேரண்டங்களில் உள்ள உலகங்களில் தோன்றுகின்ற அனைத்து மொழிகளுக்கும் தாயாக, மூலமாக, ஆரம்பமாக, கருவாக, உள்ளீடாக, உயிராக ... இருக்கின்றது.

எனவேதான், **'<u>தமிழ்மொழியைப் பிழையற எழுதுவதே பெரிய யாகம், யக்ஞம், வேள்வி, ஓமம், ஓகம், தவம், ... முதலியன செய்வதற்குச் சமமாகும்</u>'** என்று சிறப்பிக்கப் படுகிறது. இதைப் போலவே, **'<u>தமிழை மிக அழகாகவும், இனிமையாகவும் உரிய இசையோடு பேசுவதே சிறந்த பூசை</u>'** என்றும் ...... சிறப்பிக்கப் படுகிறது குருபாரம்பரியத்தில்.

9. இந்த **மெய்யான இந்துமத**த்திற்கென்று ஒவ்வொரு உலகிலும் 108 திருப்பதிகள், 243 சத்திபீடங்கள், 1008 சிவாலயங்கள், கணக்கற்ற நாற்பத்தெட்டு வகையான கருவறைகள், நாற்பத்தெட்டு வகையான வெட்டவெளிக் கருவறைகள் செயலகங்களாக அமைக்கப் பட்டே அருளாட்சி நிறுவப் படுகின்றது. இப்படி அருளாட்சி நிறுவப் பட்ட பிறகுதான் அந்த உலகம் எவ்வளவு காலம் நிலைத்திருக்கும் என்பதைக் கணக்கிட்டு அதனை உகங்களாக (யுகங்களாக) வகுப்பார்கள், பதினெண்சித்தர்களும் பதினெட்டாம்படிக் கருப்புக்களும். அதன்பிறகே, பதினெண்சித்தர் பீடாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டு அருளாட்சி அமையும். அந்த அருளாட்சியின் அருட்பேரரசாக குறிப்பிட்ட நான்கு யுகங்களுக்குள் நாற்பத்தெட்டு வகைப் பீடாதிபதிகள் தோன்றுவார்கள். இவர்களின் அருளாட்சிக்குப் பிறகு அந்த உலகம் அனைத்து வகையான நிலைகளிலும், இயக்கங்களிலும் படிப்படியாகத் தேய்ந்து, ஓய்ந்து, மாய்ந்திடும்.

10. மேற்படி அருட்பேரரசு துவங்குவது முக்கோணப் பீடமாக சத்தி ஆலயங்களை அமைக்கப் பட்டேயாகும். இந்தச் சத்தி ஆலயங்கள் மூன்றும் புதிதாகத் தோன்றும் உலகின் நிலப்பரப்பின் மூன்று எல்லைகளாக இருக்கும். இதன்படி இம்மண்ணுலகில் கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டமெனும் குமரிக் கண்டத்தின் மூன்று எல்லை மையங்களில் ஆலவாய் மாமூதூர் மதுரையெனும் நகரங்கள் படைக்கப்பட்டு அதில் மீனாட்சியம்மன் எனப்படும் சத்திபீடங்கள் அமைக்கப்பட்டே அருளாட்சி துவக்கப் பட்டது. அப்படித்

துவக்கப்பட்ட மூன்று சத்தி பீடங்களுள் ஒன்றுதான் இன்றுள்ள வைகையாற்றங்கரை ஆலவாய் மாமூதூர் மதுரை மீனாட்சியம்மன் ஆலயம். இத்துடன் விரிவஞ்சி இந்தக் கட்டுரை நிறைவு செய்யப் படுகிறது. அளப்பரிய ஆர்வமோ, அக்கறையோ உள்ளவர்கள் அண்டபேரண்டங்கள் பற்றியோ, ஆவி ஆன்மா ஆருயிர் பற்றியோ, உலக மொழி வரலாறு, இனவரலாறு, பண்பாட்டு வரலாறு, நாகரிக வரலாறு ... முதலியவைகளைப் பற்றியோ தெரிந்து கொள்ள விரும்பினால் நேரில் தொடர்பு கொள்ளலாம்.

**குவலய குருபீடம், குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

**//உண்மை நகல்//**

**//<u>இதன் மூல நகல்</u>: முசிறிச் சித்தரடியான்**
**திரு M.R. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# குடமுழுக்கு விழாவில் குருட்டுத் தன்மை

இம்மண்ணுலக மதங்களுக்கெல்லாம் மூலமாக, முதலாக, ஆரம்பமாக, தாயாக இருக்கின்ற இந்துமதத்தைப் பதினெண்சித்தர்கள் இம்மண்ணில் தோன்றி விலங்குகளோடு விலங்குகளாக இருந்த மணீசர்களுக்கு (மண்ணின் + ஈசர்கள் => மணீசர்கள் = இம்மண்ணுலக உயிரினங்களின் தலைவர்கள்) வழங்கினார்கள். அதனால் பண்படுத்தப்பட்ட மனதைப் பெற்ற மனிதர்கள் தோன்றினார்கள். அவர்களுக்குத் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு என்ற முக்கோணக் கோட்டையை அமைத்து, வடிவப்பட்ட வளமான வாழ்வை வழங்கினார்கள் பதினெண்சித்தர்கள்.

இந்த முக்கோணக் கோட்டையின் **'அருளாட்சி அலுவலகங்களே கோயில்கள்'**; **'சமுதாய நலமன்றங்களே கோயில்கள்'**, **'கலைக் கருவூலங்களே கோயில்கள்'**, **'பண்பாடு நாகரீகக் காப்பகங்களே கோயில்கள்'**, **'அருளை அநுபவப் பொருளாக வழங்கும் நிலையங்களே கோயில்கள்'**, **'அருட்கல்விக் கலாசாலைகளே கோயில்கள்'**, **'பிறவாமை பெற்ற அருளாளர்கள் நிலைத்து நின்று அருள்வழங்கும் கருவறைகளே கோயில்கள்'**, ... ... ... எனவே, இவற்றிற்குப் பதினெண்சித்தர்களின் முறையில்தான் குடமுழுக்குச் செய்ய வேண்டும்.

**<u>கருவறை உயிர்ப்புக் குடமுழுக்கு:-</u>**

நள்ளிரவு **'இலைக்குலுங்கா நடுநிசி'**யில்தான் நிகழ வேண்டும். இன்றைய கணக்குப்படி <u>இரவு</u> 11 - 1½ மணி = 2½ மணி நேரம்.

**<u>கருவறைப் புத்துயிர்ப்புக் குடமுழுக்கு:-</u>**

நடுப்பகல் **'விண்ணோக்கி இமைபிரியா உருமவேளை'**யில்தான் நிகழ வேண்டும். இன்றைய கணக்குப்படி <u>பகல்</u> 11 - 1½ மணி = 2½ மணி நேரம்.

இவற்றைக் கடைப்பிடிக்காத காரணத்தால்தான் வழிபாட்டு நிலையங்கள் காலப்போக்கில் அருள் ஊற்றெடுக்கும் ஊற்றுக் கண்கள் தடைப்பட்டுச் செயல்நலம் குன்றின. எனவே, இனியாவது இந்துமதம் காக்கப் பதினெண்சித்தர்கள் முறைப்படி குடமுழுக்கு விழாக் கொண்டாடப் படல் வேண்டும்.

பதினெண்சித்தர்கள் படைத்த 48 வகையான வழிபாட்டு நிலையங்கள் 'கோயில்' என்ற ஒரு பொதுச் சொல்லால் குறிக்கப்படும் மரபு காலப்போக்கில் பிறந்தது. எனவே, குடமுழுக்கு முறைகள் நாற்பத்தெட்டு வகைப்படும். அதாவது, நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டு நிலையங்களும் அவையவற்றிற்கு உரிய முறையில்தான் 1) குடமுழுக்குச் சாத்திரம், 2) குடமுழுக்குச் சாத்தரம், 3) குடமுழுக்குச் சாத்திறம், 4) கருவறை உயிர்ப்பு நூல், 5) கருவறைப் புத்துயிர்ப்பு நூல், 6) எழுந்தருளி உயிர்ப்பு நூல், 7) எழுந்தருளிப் புத்துயிர்ப்பு நூல், 8) கருவறைப் படிகள், 9) பூசாவிதிகள், 10) பிருஞ்யாம நூல், 11) பிருஞ்யாமச் சாத்திறம், 12) பிருஞ்யாமச் சாத்திரம், 13) பிருஞ்யாமச் சாத்தரம், 14) காயந்திரி நூல், 15) காயந்திரி சாத்திறம், 16) காயந்திரி சாத்திரம், 17) காயந்திரி சாத்தரம், 18) குண்டலி ஓகம், ... எனப்படும் நூல்களில் (அனைத்து வகைச் சமய நூல்கள்) சிலவற்றையாவது உணர்ந்தவர்கள் முன்னிருந்து தலைமை தாங்கிக் குடமுழுக்குச் செய்ய வேண்டும்.

**<u>குறிப்பு</u>**:- வழிபாட்டுக்குரியவை இறை, கடவுள், தெய்வம், ஆண்டவர், பட்டவர், தேவர், ... என்று 48 வகைப்படுவர். 'கடவுள்' என்பது காலப்போக்கில் பொதுச் சொல்லாகி வழிபடு நிலையினரைக் குறிப்பதாயிற்று. இவற்றையும் உணர்ந்தவரே குடமுழுக்குச் செய்ய வேண்டும்.

**//உண்மை நகல்//**

**//<u>இதன் மூல நகல்</u>: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# குடமுழுக்கு செய்வது பற்றிய சிறப்புக் குறிப்பு

‘பன்னிரண்டாண்டுகளுக்கு ஒரு முறைதான் குடமுழுக்கு செய்ய வேண்டும்’ என்பது தவறான கருத்தாகும்.

வழிபாட்டு நிலையக் கருவறை அருளாளர்களைப் புதைக்கப் பட்ட சமாதியா? எரிந்த சாம்பல் மீது கட்டப்பட்ட பீடமா? வழிபட்ட பொருள்களை அடிப்படையாகக் கொண்டதா? வழிபாட்டுக்காக மாந்தரீக, தாந்தரீக, ஏந்தரீக முறையில் கட்டப்பட்டதா? அல்லது எல்லா, ஈசா, இறை, இயவுள், கந்தழி, கொடி நிலை, வள்ளி, கடவுள், தெய்வம், ஆண்டவர், பட்டவர், பரம்பொருள், ஏகப்பொருள், அனேகப்பொருள், ஓமப்பொருள், ஓகப்பொருள், யாகப் பொருள், யக்ஞப் பொருள், வேள்விப்பொருள், தவப்பொருள், ஞானப்பொருள், தேவியர், தேவதைகள், தேவர்கள், வானவர்கள், விண்ணவர்கள், அண்டத்தவர்கள், பேரண்டத்தவர்கள், அமரர்கள், இருடிகள், முனிவர்கள், கணங்கள், கணபாடிகள் ... எனப்படும் பல வகையினர்களில் யாருக்குரிய கருவறை? ... என்ற வினாக்களுக்கெல்லாம் பதினெண்சித்தர்களின் முறையில் ஆய்வுகள் நிகழ்த்தி உரிய விளக்கங்களைக் கண்டுதான் குடமுழுக்குச் செய்ய வேண்டும்.

அதாவது மேற்படி உண்மைகளுக்கேற்பத்தான் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பன்னிரண்டு, பதினாறு, பதினெட்டு, இருபத்தேழு, முப்பத்திரண்டு, முப்பத்தியாறு, நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்குச் செய்தால் போதும் என்று மிகத் தெளிவாகப் பதினெண்சித்தர்களின் குடமுழுக்குச் சாத்திறங்கள், சாத்திரங்கள், சாத்தரங்கள், நூல்கள், பூசாவிதிகள், கோபுரப் புத்துயிர்ப்பு நூல்கள் ... முதலிய 48 வகையான ஏடுகளும் விளக்கமாகக் கூறுகின்றன.

**//குருதேவர் அறிக்கை 11இலிருந்து எடுக்கப் பட்ட குறிப்பு.//**

# காதணி விழா கொண்டாடும் முறை

வீரம் செறிந்த தமிழ்க் குடும்பத்தினர் தங்கள் குழந்தைகளை இறைவனுக்கே, **‘இந்துமத மூலவர்களுக்கே’** காணிக்கையாக வளர்த்து ஒற்றைப்படை எண்ணிக்கையுள்ள ஆண்டுக் கணக்கில் [1,3,5,7, ...] குலதெய்வத்தின் திருமுன்னர் கொண்டு சென்று, முடியகற்றி (மொட்டையடித்து), நீராட்டி; எந்தவித உலக பந்தபாசச் சொந்த சொத்துமின்றி நிறை மனநிலையில் நிறுத்தி; காது இரண்டும் குத்திப் பசிய குருதித் துளியைக் கருவறை முன் காணிக்கையாக்கி அருளுலகப் பட்டியலில் தங்களின் குழந்தையையும் இடம் பெறச் செய்வார்கள். <u>இதுவே காதணி விழா - மொட்டையடிக்கும் விழா.</u>

காது குத்திக் கொள்பவர் சிறுவராக இருந்தால், மொட்டையடித்து நீராட்டி நிர்வாணமாகத் தாய் மாமன் அல்லது, மாமன் உரிமையுடையோர் அல்லது, தாத்தா முதலியோர் மடியில் அமர்த்தியே காது குத்த வேண்டும். மொட்டையடிக்கும் போது தாய் தந்தை, இந்த உறவுடைய சின்னம்மா, பெரியம்மா, சித்தப்பா, பெரியப்பா முறையுடையோர் மடியில் அமர வைத்துத்தான் மொட்டையடித்தல் வேண்டும்.

சிறுவராக அல்லாமல் 5 வயதை விட அதிகமானவர்களாக இருந்தால் அவர்கள் மொட்டையடித்து நீராடிய பிறகு ‘கோடித்துணி’, ‘புதிய துணிகள்’ அணிந்து கொண்டு காது குத்திக் கொள்ளலாம். ஏனெனில், ‘கோடித்துணி’ அணிந்திருப்பது நிர்வாண நிலையாகவே கருதப்படும்.

சிறு குழந்தைகளுக்கும், 5 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் மொட்டையடித்து நீராட்டியபின் கோடித்துணி அணிவித்துக் காது குத்துவதில் தவறில்லை.

காது குத்திய பிறகே; தலையில் சந்தனம், பன்னீர், இளநீர், உராய்ந்த வெள்ளியின் நீர் + ஆமை ஓடு + தேன் => மூளைப் புத்துயிர்ப்பு அல்லது ஆவி, ஆன்மா, உயிர் எனும் மூவிலைப் புத்துயிர்ப்பு தடவ வேண்டும்.

**<u>குறிப்பு</u>**:- மொட்டையடித்துக் காது குத்துவதின் மூலமே ஆவி, ஆன்மா, உயிர் என்ற மூன்றும் தங்களின் ஊழ்வினை, வினை, ஆள்வினை (விதி) என்ற மூன்றிலிருந்தும்; ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றிலிருந்தும்; 'முட்டையை உடைத்துக் கொண்டு வெளிவரும் குஞ்சு போல்' வெளிவந்து முளைக்கின்றன.

இப்படி முளைப்பவை கருவின் பயனாலும், திருவின் அருளாலும் தக்க குருவைத் துணையாகப் பெற்றுச் செயல்பட ஆரம்பித்திடும். இதனையே பெரியோர்கள், குழந்தைகளைத் திட்டும் பொழுது,

'இன்னும் நீ முளைத்து மூன்று இலைக் கொள்ள வில்லை (அடைய வில்லை)' என்று திட்டுகின்ற மூதுரை, முதுமொழி, பழமொழி குறிப்பாக விளக்குகிறது.

"... மொட்டையடித்துக் காதுகுத்தி மூன்றிலை கொண்டவரே (பசு, பதி, பாசம்) 1. உயிர், 2. இறை, 3. தளை என்று மூன்றையும் துய்த்து உய்வு பெற முடியும்" - என்று குரு பாரம்பரியம் குறிக்கின்றது.

---

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: குருதேவர் அறிக்கை 13இல் 6ஆம் பக்கம்.//**

# உண்மையிலே இந்துமதத்தில் வீழ்ச்சி நிலையா?

இந்துமதம் விழிச்சி! எழுச்சி! செழிச்சி! பெற்றிடுமா!?!?!?

தமிழின மொழி விடுதலையே இந்து மத விடுதலை!

மத மறுமலர்ச்சியே சமுதாய அரசியல் புரட்சிகளை நிகழ்த்தும்!

மதவாதிகளின் இலக்கிய வரலாற்றறிவே விடுதலைப் போராயுதங்கள்!

கல்வியறிவும் கேள்வியறிவுமே மதவாதிகளின் கண்கள்!

இப்படிக் குரு பாரம்பரியத்தில் வினாக்களும் விடைகளும் நிறைய உள்ளன. ..... இவற்றால் பிறந்த சிந்தனை ..... .....

1. ‘**<u>மதம்</u>**’ என்றாலேயே வளத்தின் மிகுதி! வலிமையின் உச்ச நிலை! மானுட ஆற்றல்களுக்கு அப்பாற் பட்டது! .... என்ற பொருள் தெளிவாகிறது.

2. ‘**<u>இந்து</u>**’ என்றாலேயே அனைத்துக்கும் ஆரம்பம், மூலம், கரு, தாய், தொன்மையானது, பழமையானது, உயரியது, அரியது, பெரியது, சிறந்தது, அழியாதது, .... என்ற எண்ணற்ற பொருள்கள் புரிகின்றன, விளக்கமாகின்றன; நினைவுக்கு வருகின்றன.

3. ‘**<u>தமிழிலக்கியங்கள்</u>**’ என்றாலேயே இந்த மண்ணுலகம் விண், வான், ஆகாயம், பரவெளி, பாழ்வெளி, முற்பிறப்பு, ஆவி, ஆன்மா, ஆருயிர் முதலிய அனைத்துக்குமே விளக்கம் தரக்கூடியன என்ற உணர்வு வருகிறது.

4. இத்தகைய சிறப்பு மிக்க தமிழகத்திலே எல்லாக் கோயில்களிலுமே பூசை நேரங்களில் கூட்டம் நிரம்பி வழிகின்றது; பொதுவாகத் தமிழக மக்கள் தனிமனிதர் கொண்டாடும் ‘*நோன்புகள்*’, நிகழ்த்தும் ‘*சாத்திறச் சம்பிறதாயச் சடங்குகள்*’; குடும்பத்தார் கொண்டாடும் ‘*திருநாள்கள்*’; சமுதாய அளவில் கொண்டாடிடும் ‘*திருவிழாக்கள்*’ ..... முதலிய அனைத்தையுமே நம்பிக்கையோடும், விருப்பத்தோடும், பற்றோடும், பாசத்தோடும்; உறவினரோடும், ஊராரோடும் கூடிக் குலாவிக் குதூகலித்துத்தான் கொண்டாடுகிறார்கள்.

ஆனால், ஏறத்தாழப் பெரும்பாலானவர்களுக்கு நமது மதத் தத்துவங்கள், செயல் சித்தாந்தங்கள், வரலாறுகள், இலக்கியங்கள், மதப் பெரியார்களின் சாதனைகள், போதனைகள், .... <u>முழுமையாகவே தெரியாத நிலைதான் இருக்கிறது</u>. மீதமுள்ள சிறுபான்மையினருக்கும் <u>மேற்படிச் செய்திகள் அரைகுறையாகத்தான் தெரிந்திருக்கின்றன</u>. எனவேதான், நமது மதத்தின் மலர்ச்சி நிலை, வளர்ச்சி நிலை, பயிற்சி நிலை, செழிச்சி நிலை, ...... முதலிய அனைத்துமே தளர்ச்சியுற்றுக் கிடக்கின்றன.

இவற்றை யெல்லாம் போக்குவதற்காகத்தான், இன்றைக்கு 'மத மறுமலர்ச்சி இயக்கம்', 'மதச் சீர்திருத்த இயக்கம்' ..... முதலியவை தேவைப் பட்டுள்ளன.

5. நம்மவர்கள் பூசைப் பொருள்களும், படையல் பொருள்களும் எடுத்துக் கொண்டு மட்டும் கோயில்களுக்குச் செல்வது மாறி; எல்லோருமே கையில் புத்தகத்துடன் செல்லுகின்ற காலம் வர வேண்டும். கோயில்களில் பூசாறி .... முதலாக உள்ள நாற்பத்தெட்டு வகையான ஊழியக் காரர்களும் கோயிலில் நடைபெறும் (1) விரிவுரை, (2) அருளுரை, (3) சொற்பொழிவு, (4) பட்டிமன்றம், (5) கருத்து விளக்க வாதம், (6) பூசாமொழி ஓதுவித்தல் ..... முதலியவற்றில் பங்கு பெற்றிடல் வேண்டும். அதனுல், மத அறிவு (Religious Knowledge) உடையவர்களாக அனைத்து வகையான கோயில் ஊழியர்களும் தயாராகிடுவார்கள். அதனுல், **கோயில் வழிபாட்டுக் கூடமாக மட்டும் செயல்பட்டிடாமல்; அறிவு வளர்க்கும் ஞானப் பள்ளியாகவும் தயாராகிடும். அப்பொழுதுதான், மதமே குடும்பமாகிடும், சமுதாயமாகிடும், அரசியலாகிடும்**; அதன் பயனுக எதிர்பார்த்திடும் மத மறுமலர்ச்சி, மத வளவளர்ச்சி, மத ஆட்சி மீட்சி, .... முதலியவை உருவாகிடும்.

**தத்துவ நாயகம், அருளாட்சி நாயகம்,**
**தமிழினக் குருபீடம், இந்துமத ஆச்சாறியார்,**
**குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூுரர்**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: குருதேவர் அறிக்கை 42இல் வெளியாகிய கட்டுரை.//**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த ‘குமரிக்கண்டம்’.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு. 43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** அருளூறு அமுதத் தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சீவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** **தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு** எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

*__ஆதாரம்:__ மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.

**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார். இவரே **'பிருமணச் சிசு கூடத் தமிழகத்தில் இருக்கக் கூடாது'** என்றும்; **'சமசுக்கிருத ஒலி கூட தமிழகத்தில் கேட்கக் கூடாது'** என்றும்; மிகமிகக் கடுமையான கொடுமையினை உருவாக்கி; முடிவில் இராசராச சோழனுக்கு சாபம் கொடுத்து அவன் தற்கொலை செய்து கொள்ளவும் காரணமாக இருந்திட்டார்.



இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org**
**Email: indhuism@gmail.com**